# DEPOSITION OF WITNESS

(Chapter XXXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, PANRUTI.

CC. No. 115/2021

Police Station : - Kadampuliyur P.S

Deposition of Witness prosecution- LW. 3 / PW.4

| Name | திருஞானசம்மந்தம் | Taluk | பண்ருட்டி |
|---|---|---|---|
| Father's/ Husband's Name | நாராயணசாமி | Village | |
| Age | | Calling | |

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3ன் படி 30.07.2026 அன்று குற்றவியல் நடுவர் நீதித்துறை நடுவர் எண்.2, திரு. லூ.மார்ஷல் ஏசுவடியான் B.A, L.L.B(Hons) அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

(A1, A2 present)

சாட்சியை காடாம்புலியூர் காவல் நிலைய தலைமை காவலர் திருமதி.H.ஹலிமா பீவி WHC 937 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது அழகப்பசமுத்திரம் வசித்து வருகிறேன். நான் தற்போது முந்திரி வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 சக்திவேல் பட்டியல் சாட்சி ராதாகிருஷ்ணன் ஆகியோர்களும் ஆஜர் எதிரிகளும் எனது ஊரைச்சேர்ந்தவர்கள் இந்த வழக்கு சம்மந்தமாக எந்த விவரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

ஆஜர் எதிரிகள் எனக்கு நன்கு பழக்கமானவர்கள் என்றால் சரிதான். போலிசார் விசாரித்தார்கள் என்றும், போலிஸ் விசாரணையில் எங்கள் ஊரைச்சேர்ந்த சக்திவேல் என்பவர் எங்கள் ஊரில் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் எங்கள் ஊரைச்சேர்ந்த பூவராகமூர்த்தி என்பவரை எதிர்த்து தேர்தலில் போட்டியிட்டவருக்கு வேலை செய்து வந்தார் என்றும் இந்நிலையில் கடந்த 01.01.2020 அன்று பகல் சுமார் 3.20 மணியளவில் நானும் ராதாகிருஷ்ணன் என்பவரும் எங்கள் ஊர் நான்குமுனை ரோட்டில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது சக்திவேல் காடாம்புலியிலிருந்து 20Aஎன்ற பேருந்தில் வந்து

எங்கள் ஊரான அழகப்பசமுத்திரதிற்கு வந்து நாலு ரோட்டில் இறங்கி அவரது வீட்டிற்கு நடந்து சென்றபோது பூவராகமூர்த்தி சக்திவேலைப்பார்த்து அசிங்கமாக திட்டி எங்களுக்கு எதிராக தேர்தலில் வேலையா செய்யிர என்று சொல்லி இரும்பு கம்பியால் சக்திவேலின் தலையில் அடித்தார் என்றும் அவருக்கு ஆதரவாக மதியழகன் என்பவரும் மூங்கில் தடியால் சக்திவேலின் முதுகில் அடித்தார் என்றும் இருவரும் கையில் வைத்திருந்த ஆயுதங்களை காட்சி சக்திவேலுக்கு கொலை மிரட்டல் விடுத்து சென்றார்கள் என்றும் மேற்படி சம்பவத்தை நானும் என்னுடன் இருந்த ராதாகிருஷ்ணனும் பார்த்தோம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் எனக்கு நன்கு பழக்கமானவர்கள் என்பதால் அவர்களை வழக்கிலிருந்து காப்பற்றுவதாற்காக அரசு தரப்பிலிருந்து விலகி பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை- இல்லை**

Taken down before/by me in open court Readover interpreted to the witness and acknowledged by him to be correct.

Judicial Magistrate No.II,
Panruti.